## 29.15 கிராமப்புற படித்த இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டம் – மக்கள் நலப்பணியாளர்கள் நியமனம்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.50 நாள் : 24.02.1997

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.496, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 02.09.1989
2. அரசாணை (நிலை) எண்.256, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 13.07.1991
3. அரசாணை (நிலை) எண்.257, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம், துறை , நாள் 30.10.1996

**ஆணை**

1996–1997– ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கிராமங்களில் முதியோர் கல்வி திட்டம் நூலகங்கள் கிராமப் பொதுச் சொத்துக்களை பேணிக் காத்திட துணை புரிதல் சிறு சேமிப்பு திட்டத்திற்கு உதவுதல் போன்ற பணிகளுக்காக ஒரு ஊராட்சிக்கு ஒரு ஆண், ஒரு பெண் என இரண்டு பகுதி நேர மக்கள் நலப் பணியாளர்கள் நியமனம் செய்யும் பொருட்டு 25,000 இளைஞர்களுக்கு மாதம் ரூ.500/– மதிப்பூதியத்தில் வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்திற்கு புத்துயிர் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதைத் தவிர மதுவின் தீமைகளைப் பற்றி மக்களுக்கு அறிவுறுத்த தனியாக 10,000 பணியாளர்கள் நியமனம், அரசு ஆணை (நிலை) எண்.257, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 30.10.1996–ல் அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே மக்கள் நலப் பணியாளர்கள் திட்டம் 1989–1991 வரை நடைமுறையில் இருந்து 13.07.1991 நாளிட்ட ஊரக வளர்ச்சி துறை அரசு ஆணை (நிலை) எண்.256, மூலம் இத்திட்டம் கைவிடப்பட்டது. 1991–ல் கைவிடப்பட்ட மக்கள் நலப்ணியாளர்கள் திட்டத்திற்குப் புத்துயிர் அளிப்பதே இப்போது கொண்டு வரப்படும் திட்டம் என்பதால், ஏற்கனவே பணியமர்த்தப்பட்டு பணியிழந்த மக்கள் நலப் பணியாளர்களுக்கு இப்போது கொண்டு வரப்படும் திட்டத்தில் பணிபுரிய வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும், மது விலக்குப் பிரசாரத்திற்குத் தனியாக மகளிரை பணியமர்த்த வேண்டியதில்லை என்றும் அத்திட்டத்தை மக்கள் நலப்பணியாளர்கள் திட்டத்தோடு சேர்க்கலாம் என்றும் மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களிடையே பரப்பும் பணிகளை மக்கள் நலப்பணியாளர்களே செய்ய வேண்டும் என்றும் அரசு முடிவு செய்துள்ளது. அரசு ஆணை (நிலை) எண்.257, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 30.10.1996–ல் பிறப்பிக்கப்பட்ட ஆணை இதன் மூலம் நீக்கப்படுகிறது. இத்திட்டத்தினை 1996–1997–ம் ஆண்டில் செயலாக்கம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. நியமனம் செய்யப்படவிருக்கும் மக்கள் நலப்பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட பணிகளின் விபரங்கள் இணைப்பிலுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

மக்கள் நலப் பணியாளர்கள் அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் முறையான அல்லது எதிர்பாராத நிதிச் செலவின பணி அமைப்பிற்குள் அடங்கிய பணியாளர்கள் அல்ல. இவர்கள் ஓராண்டிற்கு (1996–1997) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட மதிப்பூதியம் மட்டும் பெறும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆவார்கள். ஏற்கெனவே 1989–1991 திட்டத்தின் கீழ் பணிபுரிந்த மக்கள் நலப் பணியாளர்களில் விருப்பம் தெரிவிப்பவர்களுக்கு இப்புது திட்டத்தில் மக்கள் நலப் பணியாளர்களாக புதிதாக பணியாற்ற வாய்ப்பு அளிக்கப்படும். இவ்வாறு மக்கள் நலப் பணியாளர்களாக பணிபுரிய விருப்பமுள்ள, மக்கள் நலப் பணியாளர்கள்.

(அ). முன்பு பணியமர்த்தப்பட்ட ஆவணங்களையோ அல்லது இத்திட்டம் 1989–1991 வரை நடைமுறையிலிருந்தபோது பணியாற்றி மதிப்பூதியம் பெற்ற சான்றிதழையோ அளிக்க வேண்டும்.

(ஆ). 1989–1991 வரையிலான காலத்தில் மக்கள் நலப் பணியாளர்களாக பணியமர்த்தப்பட்ட நாளில் 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதைக் கடக்காமலும் இருக்க வேண்டும்.

(இ). முன்னாள் பணியமர்த்தப்பட்ட நாளில் கல்வித் தகுதியாக 10–ம் வகுப்பு முடித்திருக்க வேண்டும். மழைவாழ் மற்றும் பழங்குடியினர் இனத்தவருக்கு அந்நாளில் 8–ம் வகுப்பு வரை முடித்திருக்க வேண்டும்.

(ஈ). இது குறித்த செய்தி அறிவிக்கையை உள்ளூர் தினத்தாள்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வெளியிட வேண்டும். முன்பு குறிப்பிடப்பட்ட தகுதிகளுக்குட்பட்டு 15 நாட்களுக்குள் விருப்பமுள்ள பணியாளர்கள் விண்ணப்பிக்கலாம். முன்பு இப்பணிக்காக உள்ள தகுதிக்குட்பட்ட பணியாளர்கள் மட்டுமே பணியில் அமர்த்தப்படுவர்.

(உ). இப்பணிக்கு நியமிக்கப்படுவோர் ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் மதிப்பூதியம் மட்டும் பெறும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆவார்கள். இவர்கள் செய்யும் சேவைக்காக மதிப்பூதியமாக மாதம் ரூ.500/– அந்தந்த, ஊராட்சி மூலம் வழங்கப்படும். இதற்காக ஊராட்சிகள் செய்யும் செலவுக்காக ஒரு பணியாளருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் அரசு ஊராட்சிக்கு உதவிநிதி வழங்கும். இவை மாவட்ட ஆட்சித் தலைவரால் பெறப்பட்டு அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்படும்.

(ஊ). இதற்காகும் செலவினத்தை புதிய பணித் திட்டமாகக் கருதப்பட்டு, இதற்கான ஒப்புதல் சட்டமன்றத்தில் காலக் கிராமத்தில் பெறப்படும், சட்டமன்ற ஒப்புதல் பெறுவதை நிலுவையில் வைத்து, இதற்கான செலவினத்தை எதிர்பாராத நிதி செலவினத்திலிருந்து (Contingency Fund) பெற்றுக் கொள்ளலாம். ஊரக வளர்ச்சி இயக்குநர் இது குறித்து கருத்துரு அனுப்பி பின் நிதித் துறையிலிருந்து ஆணை வெளியிடப்படும். ஊரக வளர்ச்சி இயக்குநர் உரிய படிவத்தில் இதற்கான கருத்துருவின் விண்ணப்பத்தை நிதித்துறைக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(எ). மக்கள் நலப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியச் செலவினத்தை கீழே குறிப்பிடப்படும் கணக்குத் தலைப்பின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்.2515–00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் 800– ஏனைய செலவு ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் JQ ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம் – மக்கள் நலப் பணியாளர்கள் –33 தொழில்முறை, சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தால் (து.தொ.கு.2515 00 800 JQ 3308)

4. இவ்வரசு ஆணை 24–2–1997 நாளிட்ட நிதித்துறையின் 1092/டி.எஸ் (எல்.எஸ்.ஆர்) 97, அ.சா.கு.எண்ணிட்ட ஒப்புதலின் கீழ் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
அரசு செயலாளர்

## 29. VILLAGE PANCHAYAT ESTABLISHMENT

**இணைப்பு – அட்டவணை**

**மக்கள் நலப் பணியாளர்கள் (ஆண்)**

1. ஊராட்சி தொடர்பான அனைத்து அடிப்படை விவரங்களைப் பராமரித்தல்
2. பூங்காக்கள் சமூகக் காடு மற்றும் குட்டைகள் போன்ற கிராமப் பொதுச் சொத்து ஆதாரங்களை பராமரித்தல்.
3. அருகில் உள்ள பொது நூலகத்திலிருந்து கிராம நூலகப் பணியினை விரிவாக்கல்.
4. கிராமங்களில் உள்ள குடிநீர் கைப்பம்பு பராமரிப்பில் கூடுதல் பாதுகாவலராகப் பணி
5. சிறு சேமிப்புப் பணிக்கு முகவராக இருத்தல், இப்பணிக்கு தனியாக முகவர் ஊக்க ஊதியம் பெற்றிட தகுதியுள்ளவராவர்.
6. மின்சார வாரியத்துடன் தொடர்வு கொண்டு தெருவிளக்குகளை பராமரித்தல்
7. ஊரக வளர்ச்சி இயக்குநரால் வரையறுக்கப்படும் ஏனைய பணிகள்
8. மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் மக்களிடையே பரப்பி, விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

**மக்கள் நலப் பணியாளர் (பெண்)**

1. முதியோர் கல்வி – முறைசாரா கல்வி
2. கிராம சுகாதாரத்திற்கு வழிகாட்டியாக இருத்தல்
3. குடும்ப நலம் மற்றும் தடுப்பு ஊசி போடுதல் – தீவிரப்படுத்துதல்
4. சத்துணவுத் திட்டப் பணிகள்
5. மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பணிகள்
6. சிறு சேமிப்புப் பணிக்கு முகவராக இருத்தல், இப்பணிக்கு தனியாக முகவர் ஊக்க ஊதியம் பெற்றிட தகுதியுள்ளவராவர்
7. ஊரக வளர்ச்சி இயக்குநரால் வரையறுக்கப்படும் ஏனைய பணிகள்
8. மது அருந்துவதால் ஏற்படும் தீமைகளை மக்களிடையே பரப்பி, விழிப்புணர்வை ஏற்படுத்துதல்